விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 27 ரபியுல் 10 இதழ் 275

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13-11-1986

## பிரபாவை விடுதலைசெய்யும் வரை இந்திய மத்திய, தமிழக அரசை கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[நமது நிருபர்]

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரனை விடுதலை செய்யும்வரையும் கைப்பற்றிய ஆயுதங்களை ஒப்படைக்கும்வரையும் இந்திய மத்திய அரசையும், தமிழக அரசையும் கண்டித்து தமிழீழமெங்கும் கண்டன ஊர்வலங்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'தமிழீழ மக்கள் போராட்ட நடவடிக்கைக்குழு' இக்கண்டன ஊர்வலத்துக்கான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

### இன்று

இன்று காலை 10மணியளவில் பெருமாள் கோவிலிலிருந்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

மாதர் அணிகள், மாணவர்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளவுள்ளன.

### பிரபாகரனை விடுதலைசெய்

'தமிழீழ மக்கள் போராட்ட நடவடிக்கைக்குழு' இக்கண்டன ஊர்வலம் சம்பந்த

8ம் பக்கம் பார்க்க)

### விமானப்படை, கடற்படையின் உதவியுடன்

# வடமராட்சியை முற்றுகையிட இராணுவம் பலத்த முயற்சி

## விடுதலைப்புலிகள் கடும் எதிர்த்தாக்குதல்

(நமது நிருபர்)

**வடமராட்சிப் பகுதியை முற்றுகையிடும் நோக்கமாக கடற்படையினரதும், விமானப் படையினரதும் உதவியுடன் முன்னேறிக் கொண்டிருக்கும் பெருந் தொகையான இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு தாக்குவதில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

2-வது நாளாக இந்த நேரடிச்சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இராணுவமுகாம்களிலிருந்து நேற்றுமுன்தினம் காலை வெளிவந்த பெருமளவு இராணுவத்தினர் வடமராட்சிப்பகுதியை முற்றுகையிடுவதற்கு முன்னேறிக்கொண்டிருந்த சமயம் விடுதலைப்புலிகள் எதிர்கொண்டு உக்கிரமாகத் தாக்கத் தொடங்கினர்கள். இதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையே பலத்த நேரடி மோதல் இடம்பெற்றது.

இராணுவத்தினருக்கு உதவியாக கடல் பகுதியிலிருந்து பீரங்கிப்படகுகள் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தன. இரு விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தது. ஹெலிகொப்டர்களும் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததுடன் 'ஷெல்'களை ஏவிவிட்டன. முகாம்களிலிருந்தும் 'ஷெல்' தாக்குதல் நடைபெற்றது.

இத்தாக்குதல்களுக்கும் மத்தியில் விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலால் வெளிவந்த இராணுவத்தினர் பாரிய இழப்புகளுடன், குடிமக்கள் விட்டுச்சென்ற வீடுகளுக்குள் புகுந்து கொண்டனர்.

2வது நாளாகவும் நேற்று

(8ம் பக்கம் பார்க்க)

## வல்லைப் பாலம் குண்டு வைத்துத் தகர்ப்பு

வல்வெட்டித்துறை, புதன்

வல்லைப் பாலத்துக்கு அடுத்துள்ள மதகு நேற்றுக் காலை இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஹெலிக்கொப்டரிலிருந்து இறங்கிய இராணுவத்தினரே மதகுக்குக் குண்டு வைத்துத் தகர்த்துவிட்டு மீண்டும் ஹெலிகொப்டரில் ஏறிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மதகு சேதமடைந்ததால் யாழ்ப்பாணப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நேற்றுக் காலை தொடக்கம் இப்பகுதியில் ஹெலிக்கொப்டர்களில் இருந்து தொடர்ச்சியாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. [மா]

## இறந்தவர் முகாமிலிருந்து கடிதம் எழுதினர்

மன்னார், புதன்

மன்னார் கடலில் மிதந்து வந்த சடலங்கள் தமது உறவினரின் சடலங்கள் எனக்கருதி மரணச் சடங்கு நடத்திய பலர் இப்போது தமது உறவினர்கள் உயிருடனிருப்பதை அறிந்து ஆச்சரியமடைந்துள்ளனர்.

அண்மையில் தலைமன்னார் கடலில் மிதந்து வந்த

[5ம் பக்கம் பார்க்க]

### விஜிதரன் கடத்தல்

## திட்டமிட்டபடி இன்று உண்ணாவிரதம் நடைபெறும்

யாழ்ப்பாணம், வியா

யாழ். பல்கலைக்கழக மாணவன் அ. விஜிதரன் கடத்தப்பட்டதைக் கண்டித்து இன்று திட்டமிட்டபடி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நுண்கலைப்பீடத்திலும் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெறும்.

இதேவேளை நேற்றுப்பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீடம் சித்தவைத்திய மருத்துவபீடமுட்பட அனைத்துப் பீட மாணவர்களும் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள்

(8ம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறை ஆஸ்பத்திரி மீதான

## ஷெல் தாக்குதலை கண்டித்து ஊழியர் வெளிநடப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை வானத் தாக்குதலில் சேதப்படுத்தப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து நேற்று புதன்கிழமை ஆஸ்பத்திரி டாக்டர்கள், உதவி வைத்திய மாணவர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் வெளிநடப்புச் செய்ததையடுத்து வைத்தியசாலை நடவடிக்கைகள் யாவும் சிலமணி நேரம் ஸ்தம்பித்தன.

இவ்வைத்தியசாலை வானத் தாக்குதல்களினால் சேதப்படுத்தப்பட்டது சம்பந்தமாக இவர்கள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கூடாக சுகாதார அமைச்சர் திரு ரஞ்சித் அத்தபத்துவுக்கு அறிவிப்பதென்றும் தீர்மானித்துள்ளனர்.

இவ்வானத் தாக்குதல்களினால்

(8ம் பக்கம் பார்க்க)

## புளொட் உமாவும் வீட்டுக்காவலில்

சென்னை, நவ 12

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் க. உமாமகேஸ்வரன் இந்தியாவில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டில் தங்கி

[8ம் பக்கம் பார்க்க]

### வரவுசெலவுத் திட்ட யோசனைகள்:

# அத்தியாவசிய பொருள் விலையில் மாற்றமில்லை சிகரட், சாராயம், பியர் விலை அதிகரிப்பு

கொழும்பு, புதன்.

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தின் பத்தாவது வரவுசெலவுத் திட்டத்தை நேற்று சமர்ப்பித்த நிதி திட்டமிடல் அமைச்சர், அதில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

கோதுமையின் இறக்குமதி வரியை 5சத வீதத்திலிருந்து 10சத வீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் மாவின் விலையிலோ அல்லது பாணின் விலையிலோ எதுவித அதிகரிப்பையும் செய்யவில்லை, இதற்கான இறக்குமதியின் மேலதிக செலவினத்தை உணவு ஆணையாளரின் திணைக்களம் ஏற்றுக்கொள்ளும்.

இந்த வரவுசெலவுத்திட்ட யோசனைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- [8-ம் பக்கம் பார்க்க]

### இனப் பிரச்சனை எழாதிருந்தால்

## இலங்கை வளர்முக நாடுகளில் சிறந்ததொன்றாக விளங்கும்

(கொழும்பு)

'இனப்பிரச்சனை எழாதிருந்தால இலங்கை வளர்முகநாடுகளில் சிறந்த ஒன்றாகத்திகழ்ந்திருக்க முடியும்'.

இவ்வாறு நேற்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் 10-வது வரவு செலவுத் திட்டத்தின் மீதான உரையை ஆரம்பித்து நிகழ்த்திய நிதி, திட்டமிடல் அமைச்சர் ரொனி டி மெல் தெரிவித்தார்.

சாதாரண மக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தாதவாறு தான் இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளதாக கூறிய அமைச்சர் 1983-க்குப் பின் நடைபெற்று வரும் துக்ககரமான வன்செயல் சம்பவங்களால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச ரீதியில் இலங்கையின் பொருளாதாரம் மந்த நிலையை அடைந்துள்ளதாகவும் கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது (8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Christombu Farm சேவற் குஞ்சுகள் 19ம் திகதி புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்
(C-5636)

அளவெட்டி வடக்கு கூட்டுறவாளர் வீதியில் M. P. C. S இற்கு அருகாமையில் கிணற்றுப்பங்குடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். ந கனேஸ்வரி, அலவத்தை, அளவெட்டி. C 5719

Prima Poultry Food எல்லா வகையான பிறிமா கோழித்தீனும், மருந்து வகைகளும், ஒருநாள் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் லேன், முத்திரைச் சந்தை, நல்லூர். C 5706

மிகத்திறம் நிலையிலுள்ள சிவப்புநிற 81 ஸ்ரீ தொடர்பிலக்க வெஸ்பா ஸ்கூட்டர் (Px 150 Vespa) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. சிறீதரன், மின்சார சபை சுன்னாகம், அல்லது சிவபுர வீதி, வல்வெட்டித்துறை.
C 5711

புன்னாலைக்கட்டுவன் ஈவினை கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடியவீட்டுடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: சு. கமலாம்பிகை, C/o மங்களேஸ்வரன், காரைக்கால், சிவன்கோவிலடி. இணுவில்
C 5727

மானிப்பாய் உடுவில் வீதியில் ரேஸ் ரொபிக்கம்பனிக்கருகாமையில் இரண்டு கடைகளுடன் 5 பரப்பு வீட்டு நிலம் விற்பனைக்கு உண்டு. மா. இராசரத்தினம், உடுவில்வீதி, மானிப்பாய்.
(C-5744)

வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் தெற்குவீதி ஒழுங்கையில் 4½ பரப்பு வீடுகட்டுவதற்கு உரிய பனங்காணி விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். கா. நடராசா நுணுவில் சந்தி, (அம்பாள் சனசமூக நிலைய முன்பாக மடத்தடி) சாவகச்சேரி.
(C-5742)

நேரத்தை மிகுதிப் படுத்த கையால் இடித்து வறுத்த "அரிசிமா" எங்களிடம் கிடைக்கும். 500 கிறும் பெக்கட் ரூபா 9-50 வியாபாரிகளுக்கு விஷேசகழிவு M G M. 777 K. K S Road and 208 1 St Cross St Jaffna. T.P. 22611. (C-5065)

## வகுப்புக்கள்

108 Brown Road, A/L 88 அசேதன இரசாயனம் [(S. P, D தொகுப்பு] ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்: 15-11-86 சனி 6-15 a m. சனி, ஞாயிறு 6-15 a m.
(C5733)

## வாடகைக்கு


யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு மிக அண்மையில் மாணவிகளுக்குச் சாப்பாட்டுடன், சாப்பாடில்லாமல் சமைக்க வசதியுடன் அறைகள் உண்டு. 148, இராமநாதன் வீதி [பல்கலைக்கழக மாணவிகளின் விடுதிக்கு எதிரே) (C-5736)

## தேவை

தமிழ் ரைப்பிங் வேலைகள் விசேடமாக 'ஸ்ரென்ஸில் கட்டிங்' இல் நன்கு அனுபவமும் ஆற்றலுமுள்ள ரைப்பிஸ்ட் யாழ் நகரிலுள்ள முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு உடன் தேவை. சுயவிபரங்கள்: கல்வித்தகைமை, ரைப்பிங் தொழில் அனுபவங்களுடன் சொந்தக் கையெழுத்தில் இருபாலாரும் 24 - 11 - 1986 ந் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விள. இல; C- 5749 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். [C-5749]

அதிர்ஷ்டலாபச்சீட்டு கொமிஷன் அடிப்படையில் விற்பனை செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: வீனஸ், 266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(C 5738)

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



"சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன் ஓட்டத்தை முடித்து விட்டேன்"

திரு. எலியாஸ் மரியான் ஜேம்ஸ்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், அவிசாவளை புனித மரியாள் கல்லூரி, நாவாந்துறை றோ. க. பாடசாலை)

அன்னை மடியில்: 1921-07-31
ஆண்டவன் அடியில்: 1986-10-14

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய் பலரையும் கவர்ந்து வந்தீர். வாழ்வின் வழிகாட்டியாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை வழிநடத்திவந்தீர். திங்கள் ஒன்று சென்றதுவே-உன் திருவுருவம் நாம் கண்டு என்றும் எம்மை மறந்திடாது இறைவனடி வேண்டிடுவீர். திடீரென எம்மை விட்டுப்பிரிந்தஎம்குடும்பத் தலைவனது இறுதிச் சடங்குகளில் கலந்து எமக்கு ஆறுதல் கூறியும், அனுதாபத்தந்திகள், மடல்கள்வழியாக எம் துயரில் கலந்து கொண்ட அனைவருக்கும் எம்இதயம் கனிந்த நன்றிகள். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக [இன்று] 13 - 11 - 86 வியாழன் காலை 6 00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும். இரங்கல் பலியில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்மசாந்தியடைய இறைவனை மன்றாடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மனைவி, பிள்ளைகள். [C 5747]

## சேவை

Lamination-உங்கள் படங்களையும் கல்வித் தராதரப் பத்திரங்களையும் பூச்சியில் இருந்தோ அல்லது காலத்தினால் வரும் அழிவில் இருந்தோ காப்பாற்றி தனிமுறை தனிமுறையாகப்பாதுகாக்கபொலியஸ்டர் உறையில் நிரந்தரமாக சீல் செய்து வைக்க, தொடர்பு கொள்ளவேண்டிய இடம், ஞானம்ஸ் ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்; அல்லது பத்திநாதன், 118, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
C 5712

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையுள்ளது)

## வெற்றுச்சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 3547 வெற்றுச்சாக்குகள் கேள்விமூலம் விற்பனைக்குண்டு.

கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத்திகதி. 17-11-86 கேள்வி விண்ணப்பங்கள் அரக்கு முத்திரை போடப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
259, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம். A 3092

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனம் ஏதும் எழுதாது காலஞ்சென்ற புலோலி தெற்கு கணபதிப்பிள்ளை சந்திரசேகரத்தின் சொத்து விடயமாக:

வழ. இல T/1249

1. கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் கை/பெண் கமலாதேவி புலோலி தெற்கு.

மனுதாரர்.

எதிர்

பராயமற்றவர்கள்
1. சந்திரசேகரம் இலங்கேஸ்வரன்
2. சந்திரசேகரம் மகள் குமுதினி
3. சந்திரசேகரம் மகள் ரதினி

வழக்குப்பாதுகாவலர்
4. கணபதிப்பிள்ளை கார்த்திகேசுஎல்லோரும் புலோலி தெற்கு.

எதிர்வாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கு மேற்குறித்த இறந்தவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறித்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த எதிர்வாதிகள் அல்லது அக்கறையுள்ள ஆள் அல்லது ஆட்கள் எவரும் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் அவற்றைக் காட்டுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1986-ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13-ம் ஆம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
சண்முகம் நடராசா
பதிவாளர்.

வரைவு:
வ. கு. கணபதிப்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி
[C-5695]

## விஷேட சொற்பொழிவு

சுழிபுரம், புதன் வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளியன்று பிற்பகல் திருமதி வசந்தா வைத்தியநாதன் அம்பிகையின் அருள்பெற்ற அடியார்களென்னும் விடயமாக விஷேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவார்.

ஆலய பரிபாலன சபையினர் சொற்பொழிவு நடைபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர். [எ]

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

எமது தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் கால்நடை உணவுகளை விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றனர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் உணவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு போதிய இடவசதியை ஏற்படுத்தல்வேண்டும். ஒரு தொன்னுக்கு மேலாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு 5% விற்பனைக் கழிவு வழங்கப்படும் விநியோகம் இலவசம்.


விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு 26-11 86ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
யாழ் மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
[A 3091]

## கார்த்திகைத் தீபம்

யாழ்ப்பாணம், வியாதெல்லிப்பழை திருஷி ஈஸ்வரம் பாலசுப்பிரமணியர் கோவில் கார்த்திகை தீப உற்சவம் இம்மாதம் 17ம திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

## ஐந்தாவதாண்டு நினைவஞ்சலி



L. A. யேசுதாசன்
(ஆசிரியர்)
13-11-86

பரந்த உள்ளம்
கொண்டவராய்
பாரில் நன்மை பல
செய்து
சிறந்த உம்மைப்
பிரிந்ததனால்
சிறப்பை நாங்கள்
இழந்துவிட்டோம்
வருந்தி இன்னும் துடிக்
கின்றோம்
வாழ்வில் நடுநாயக
மாக
இருந்த உம்மை எம்
வாழ்வில்
இனிமேல் என்று
காண்போமோ

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்
சென்.அன்ரனிஸ் லேன்,
பண்டத்தரிப்பு.(C5652)

யாழ்ப்பாண அக்கடமி
க. பொ. த. உயர்தர பரீட்சை-ஆகஸ்ட். 1987.

## மீட்டல் வகுப்புக்கள்

87-ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புக்கள் 17-11-86 ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும் சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி எண்: 22617. (A 3058]

## விக்னு

டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக, வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

A/L

87 மீட்டல் வகுப்பு

DAY CLASSES

8 மணி

Sat-Sun: வகுப்பு 12 மணி
ஆரம்பமாகியுள்ளன.

குறிப்பு:- கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது. A 2860

## வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

## ஆண்டு 7 (தரம் 6) அனுமதி 1987

விண்ணப்ப முடிவு திகதி 15 12-1986
விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் பூர்த்திசெய்து பின்வரும் முகவர்க்கு அனுப்புக.

அதிபர்,
யா/ வசாவிளான் ம. ம. வி.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
(C 3094]

# ஜப்பான் கடலில் சோவியத் பயணிகள் கப்பலில் தீ!

# 300 சிறுவர் மயிரிழையில் தப்பினர்

மாஸ்கோ, நவ 12.

**சோவியத் பயணிகள் கப்பல் ஒன்றில் மூண்ட பெருந் தீவிபத்தொன்றிலிருந்து 300 பாடசாலைச் சிறுவர்கள் மயிரிழையில் உயிர் காப்பாற்றப்பட்டனர். இக்கப்பலின் சிப்பந்திகள் இருவர் கொல்லப்பட்டனர். வேறு சிலர் காயமடைந்தனர்.**

சோவியத்கரைக்கு 60 மைல்கள் தொலைவில் ஜப்பான் கடலில் இக்கப்பல் தீவிபத்து இடம் பெற்றது.

'செத்மேனியா' என்ற இக்கப்பலின் இயந்திரப்பகுதி அறையிலேயே முதலில் தீப்பிடித்துக் கொண்டது. தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் தீ பரவியதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை காலையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது. மிகவும் குளிரான காலநிலை நிலவும் ஜப்பான் கடல்பகுதியில் விரைவாக அக்கப்பலில் தீ மூண்டது குறித்து ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

இயந்திர அறையில் தீ மூண்டதையடுத்து அக்கப்பலின் காப்டன் கப்பலிருந்த அனைவரையும் உயிர்காப்புப்படகுகளில் ஏறிக்கொள்ளுமாறு உத்தரவிட்டார். இதனையடுத்து அதிலிருந்த சுமார் 300 சோவியத் பாடசாலைச் சிறுவர்களும் பாதுகாப்பாக உயிர்காப்புப்படகுகளில் ஏற்றப்பட்டனர்.

தொடர்ந்து அக்கப்பல் விடுத்த உதவி கோரும் சமிக்ஞைகளையடுத்து ஜப்பான் கடல்பகுதியில் நின்ற வேறு இரு கப்பல்கள உயிர்காப்புப் படகுகளிலிருந்தவர்களை பாதுகாப்பாக கரைசேர்த்தன.

24 மணிநேரத்தின் பின்னர் அந்த சோவியத் கப்பலில் மூண்ட தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆகஸ்ட் மாதம் கருங்கடல் பகுதியில் இரு சோவியத் கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதையடுத்து அவை இரண்டிலுமிருந்த 390 பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த விபத்து சர்வதேச ரீதியில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இதனையடுத்து தற்போது ஜப்பான் கடலில் நிகழ்ந்த விபத்தை சோவியத் உடனடியாக அறிவித்ததுடன் விரைவான மீட்புப்பணிகளிலும் ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டது.

## ஆப்கானில் மூன்றிலொரு பங்கு மக்கள் தஞ்சம்

வாஷிங்டன், நவ 12.

ஆப்கானிஸ்தான் நாட்டவரில் மூன்றிலொருபங்கினர் அகதிகளாக உள்ளனர் என அறியப்பட்டுள்ளது.

சுமார் 50 லட்சம் ஆப்கானிஸ்தான் மக்கள் சோவியத்-ஆப்கானிஸ்தான் இராணுவ நடவடிக்கைகளால் அகதிகளாகியுள்ளனர். இவர்களில் 30 லட்சம் பேர் பாகிஸ்தானுக்குள்ளும், 20 லட்சம் பேர் ஈரானுக்குள்ளும், 15 லட்சம் பேர் வரை ஆப்கானிஸ்தானிலும் அகதிகளாக இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் மூலமாகவே இத்தகவல் கிடைத்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மீது சோவியத் - ஆப்கான் விமானங்கள் அடிக்கடி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. இது தவிர எல்லைப்புறப்பகுதி மக்களை நகர்ப்பகுதிகளுக்குள் குடியமர்த்தும் பணிகளையும் தீவிரமாக மேற்கொள்கின்றன. இவற்றின் காரணமாகவே ஆப்கானிஸ்தானியர்கள் பலர் அகதிகளாகியுள்ளனர்.

அகதிகளாகியுள்ள ஆப்கானிஸ்தானியர்களில் பெரும்பாலானவர்கள் அந்நாட்டின் பல்வேறு இனங்களையும் சேர்ந்த எல்லைப்புற ஆதிக்குடிகளாவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அகதிகள் பிரச்னை காரணமாக ஆப்கானிஸ்தானின் விவசாய, கால்நடை வளர்ப்பு, மற்றும் சிறுகைத்தொழில் என்பன வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரைன் நதியில் 'ரொக்ஸிக்' இரசாயன கலப்பு!

ஜெனிவா, நவ 12

சுவிற்சர்லந்தில் ரைன் நதியில் 'ரொக்ஸிக் இரசாயனம்' தவறுதலாகக் கலந்துவிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இரு வேறு சந்தர்ப்பங்களில் இந்த 'ரொக்ஸிக்' நச்சு இரசயனம் கலந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கலந்த ரொக்ஸிற் சுமார் 400 லீட்டர் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டது.

சுவிஸ் அரசு இதுகுறித்துக் கவலை தெரிவித்திருப்பதுடன் ரைன் நதி பாயும் அயல்நாடுகளையும் இந்த இரசாயன கலவை குறித்து எச்சரித்துள்ளது.

சுவிற்சர்லாந்தில் ரைன் நதிக்கரையிலுள்ள இரு தொழிற்சாலைகளிலிருந்தே தவறுதலாக ரொக்ஸிக் நச்சு இரசாயனம் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுற்றாடலில் பாதுகாப்புப் பிரிவினரையும் இந்த ரொக்ஸிற் இரசாயனக் கலவை சம்பந்தமாக சுவிஸ் அரசு எச்சரித்துள்ளது.

## கெய்ரோவில் 37 இலங்கையர் தஞ்சம்?

கெய்ரோ, நவ 12

இலங்கைத் தமிழர்கள் என்று கருதப்படும் 37 பேர் எகிப்தின் தலைநகரான கெய்ரோ விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கிறீஸ், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோரிச்சென்ற இவர்கள் அங்கு அரசியல் தஞ்சம் மறுக்கப்படவே கெய்ரோ விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

கெய்ரோ விமான நிலையத்தில் விமான நிலைய அதிகாரிகளால் இந்த 37 பேரும் இப்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## சிங்கை எதிர்க்கட்சித் தலைவருக்குச் சிறை

சிங்கப்பூர், நவ 11

சிங்கப்பூர் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு பொன். ஜெயரத்தினத்திற்கு குற்றச்சாட்டொன்றின் பேரில் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வழக்கறிஞரான திரு ஜெயரத்தினம் சிங்கப்பூரில் நீதிபதியாக கடமையாற்றியவர். சிங்கப்பூர் ஆட்சியை காரசாரமாக கண்டனம் செய்து நாடாளுமன்றத்தில் அடிக்கடி குரல் எழுப்பியிருக்கிறார்.

அண்மையில் பிரதமர் லீ குவான்லி திரு ஜெயரத்தினத்தைத் தாக்கிப் பேசும்பொழுது நீர் ஒரு சந்தர்ப்பவாதி, நேர்மையற்றவர், உமது அரசியல் வாழ்க்கைக்கு சாவுமணி அடிக்கவேண்டும் என்று எச்சரித்தார்.

இக்குற்றச்சாட்டுக் காரணமாக திரு. ஜெயரத்தினம் தனது நாடாளுமன்றப் பதவியை இழக்கவேண்டியிருக்கும் என்று தெரியவருகிறது.

## தமிழ் மக்கள் விரும்பும் ஆட்சியை அமைக்கலாம்

### அ. லிகிதர் சேவை சங்க மகாநாட்டில் தீர்மானம்

கொழும்பு, புதன்

தமிழ் மக்கள் தாம் விரும்பும் ஆட்சியை அமைத்துக் கொள்ள உரிமையுடையவர்கள் என்பதை அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் தனது 60வது வருடாந்த மகாநாட்டில் ஒரு தீர்மானம் மூலம் அங்கீகரித்துள்ளது.

கடந்த 7ம் திகதி நடைபெற்ற மேற்படி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விபரம் வருமாறு:

"அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்பன மூலம், வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களையும் நாடு பூராவும் உள்ள இடதுசாரிகளையும் அடக்கி ஒடுக்கி, அரசாங்கம் மனித உயிர்களை அழித்தொழிக்கும் முறையினை கவனத்திற் கொண்டு, தமிழ் விடுதலைப் போராளிகள் நடாத்தும் போராட்டம் யூ. என். பி அரசாங்கத்திற்கு எதிராக தமது இனத்தின் விடுதலைக்காக நடாத்தப்படும் விடுதலைப் போராட்டம் என்பதையும், தமிழ் மக்கள் தாங்கள் விரும்பும் ஆட்சியை அமைத்துக் கொள்வதற்கு தமிழ் மக்களுக்குள்ள உரிமையையும் இம்மாநாடு அங்கீகரிக்கிறது"

மேலும் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம், பாதுகாப்பு வலயச் சட்டம் ஆகிய சட்டங்களை உடனடியாக நீக்கும்படியும் வடக்கு கிழக்கு மலையகம் உட்பட எல்லாப் பிரதேசங்களிலுமுள்ள தமிழ்பேசும் மக்களுக்கெதிரான சகல வன்முறைகளையும், அடக்குமுறைகளையும் நிறுத்தப்பட வேண்டுமெனவும் அரசின் சகல ஆயுதப்படைகளும் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து முற்றாக அகற்றப்பட வேண்டுமெனவும் சகல அரசியற்கைதிகளையும் விடுதலை செய்யும்படியும் இம்மாநாடு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது.

மேற்படி மாநாட்டில் திரு. குணசேன மகாநாம தலைவராகவும், திரு அ சிவரத்தினம் துணைத் தலைவராகவும் திரு. காமினி ஜயசேகர செயலாளராகவும், திரு இ. தவராசா துணைச் செயலாளராகவும் மிகப் பெரும்பான்மையான வாக்குக்களால் தெரிவு செய்யப்பட்டனர். 37 பேர் கொண்ட மத்திய நிறைவேற்றுக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## அநாதைச் சிறுவர்களுக்கு அழைப்பு

வவனியா, புதன்

நுவரெலியாவிலுள்ள சர்வதேச அநாதைகள் கிராமத்திற்கு வவனியாவிலிருந்து அநாதைச் சிறுவர்கள் தேவைப்படுகிறார்கள் என அறிவிக்கப்படுகின்றது.

இந்துசமய அநாதைச் சிறுவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன ராம் கல்வி உட்பட ஏனைய சகல வசதிகளும் இவர்களுக்கு அளிக்கப்படவுள்ளன.

## 8 மாணவர் சித்தி

வேலணை புதன்

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் 5ம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வேலணைக் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்தும் வேலணைக் கொத்தணி அமைப்புக்குள் அமைந்த பாடசாலைகளிலிருந்தும் எட்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய மாணவனான செல்வன் கு கிருபரன் அகில இலங்கை ரீதியில் 187 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார். மேற்படி மாணவன் வவனியா தமிழ்ப்பிரிவு உதவி அரசாங்க அதிபராக இருந்து அநுராதபுரத்தில் அகால மரணமடைந்த திரு ஆ குணநாயகத்தின் மகனாவார். (எ)


# விவசாயிகளே!

உங்கள் நெல்வயல்களில் மடிச்சுக்கட்டியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதனால்

**லெபேசிட் ஈ சி 50%**
(பென்தியோன்)

விலை: 100 மி லீ. ரூ. 35/-
200 மி லீ. ரூ. 65/-
450 மி.லீ. ரூ. 115/-

பாவித்து முழுமையான கட்டுப்பாட்டை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை

BAYER

**ஹேகெம் லிமிட்டெட்,**
400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

இது ஒரு மேற்கு ஜேர்மன் தயாரிப்பு [A 2865]

### மணி வாக்கு

பக்கத்தில் நிற்கும் பசுவைக்கறப்பதை விட்டு வெருண்டோடும் மாட்டைத் துரத்தித்திரிவதனால் என்ன பயன்?

- தியோக் கிறிற்றன்

# நமது நோக்கு

## இராம இராச்சியம்

இலங்கை அரசு, இந்திய தமிழ் நாட்டரசு பற்றிய செய்திகளைக்கேட்டுஅலுத்த காதுகளுக்கு இன்று கிடைத்திருக்கும் செய்தி சிந்தனைத் திருப்பத்துக்கு உசவுகிறது.

உத்தர பிரதேசத்தில் உள்ள அயோத்தியில் ராமர் ஆலயத்தில் நடந்த பெருவிழாவில் சன நெரிசலால் 50 பேர் உயிரிழந்தனர். 16 பேர் மோசமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 32 பேரின்சடலங்களே கண்டெடுக்கப்பட்டன. பெரும்பாலோர் பெண்களும் குழந்தைகளுமே.

இக்காலத்தில்இதுபோன்ற சம்பவம் ஒரு கோவில் விழாவில் நடைபெறுவது ஆச்சரியமாகத் தோன்றும். இந்தியாவில் நடைபெறும் 'கும்பமேலா'வில் இதுபோன்ற கொடுமையைத் தவிர்க்கவேண்டுமென்று குரல் கொடுத்தார் நேரு. சுதந்தரத்திற்கு முற்பட்ட காலத்தில் இதுபோன்ற விழாவைச் சட்டரீதியாக நிறுத்துவதே தக்கவழியென்றநேருவின் கருத்தை பொதுஜன அபிப்பிராயம் ஏற்கவில்லை.

நேரு நாத்திகரென்று கருதப்பட்டபோதும் இந்தியாவின் பழமையையும் அதன் தெய்வீகத்தையும் மிகவும் மெச்சினர். எனவே இத்தகைய அகில இந்திய சமய விழாவின் அனர்த்தங்களைத் தடுக்க முடியாமல் போய்விட்டது.

அயோத்தியில் பூட்டப்பட்டிருந்த ஸ்ரீ ராமன் கோயில் பலவருடங்களுக்குப்பின் திறக்கப்பட்டதும், அது இந்து - முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தியதும் அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள்.

இன்று இக்கோயிலில் நடைபெறும் விழாவும் அங்கு திரளும் பக்தர் கூட்டமும் இத்துன்ப நிகழ்ச்சிக்கு இடமளிக்கின்றன இராமனைத் தெய்வமென்று கொண்ட மகாத்மாகாந்தி சுதந்திர இந்தியாவில் இராம இராச்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படவேண்டுமென்று பாடுபட்டு உயிர்நீத்தார்.

விஞ்ஞானத்தால் மேம்பட்டிருக்கும் இவ்வுலகில் இச்சம்பவம் கடவுள் பேரில் நடைபெறுகிகாட்டுமிராண்டித்தனம் என்ற கண்டனம் நிச்சயம் எழும். விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பான அணுகுண்டின் அழிவுக்கு இது எம்மட்டென்டதை நாம் மறந்து விடுகின்றோம்.

அது எவ்வாறாயினும் இராமன் என்பது தெய்வத்தின் ஒருபெயரென்பதையும், அப்பெயர் இன்று சனசமுத்திரத்தை வரவழைக்கவல்லதென்பதையும் சிந்திக்க வைப்பதே இன்றைய கோரச் செய்தி.

இராமாயணம், பாரதம் இந்தியாவின் இருபெரும் இதிகாசங்கள். வேதகாலங்களுக்குப் பின்வந்த இதிகாசகாலம் கண்ட இவ்விருபெரும் காப்பியங்கள் இன்று அகில உலகின் இலக்கியத்தில் அழியா இடம்பெற்றிருக்கின்றன.

இராமாயணம், ஸ்ரீராமச்சந்திரன் சீதை இவர்களுடைய கதையையும் இலங்கை அரசன் இராவணனோடு சண்டையிட்ட வரலாற்றையும் கூறுகிறது வடமொழியில் வால்மீகி மகரிஷியால் எழுதப்பெற்ற நூலைத்தழுவி தமிழில் எழுதப்பெற்ற கம்பராமாயணம் மிகப்புகழ் பெற்றது இதை இன்றைய தமிழ் உலகம் நினைவிற்கொள்ளும் காலம் மீண்டும் வந்திருக்கிறது.

உலகம் போற்றும் உத்தம இலக்கியம், கல்வி நலம் படைத்த தமிழ் நாட்டுக்கு தெய்வக்கவிஞன் கம்பர் தந்த அழியாக் கொடையெனலாம்.

கம்பரும் திருவள்ளுவரும் தமிழுக்குக் கதி என்பார்கள்.

அதனை இவ்வாறு வற்புறுத்த இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள இன்றைய அரசியல்நிலைபொருத்தமாகிறது. இராமாயணத்தின்உட்பொருள்இன்று இவ்விருநாடுகளுக்குண்டான பிணக்கில் விஸ்வரூபமெடுத்திருக்கிறது

இவ்வுலகில் நன்னெறி தீநெறி என்று இருநெறியுண்டென்றும், நன்னெறி நன்மையைய நாடிச்செல்லும் என்றும், தீநெறி எப்பொழுதும் தீமையிற் படருமென்றும் நீதி நூல் கூறுகின்றது. இதுவே இராமாயணத்தின் உட்பொருளாகும்

இவ்விருநெறியும் ஒன்றற்கொன்று முரண்பட்டிருப்பதால், ஒன்றுதான் வெற்றியடையும. மறநெறிமுதலில் மேம்படுவது போல் தோன்றினும் இறுதியில் அறநெறியே வெல்லும் என்பது ஆன்றோர் கொள்கை.

இராமாயணத்தில் காணப்படும் இன்னொரு உண்மையும் நவீன நாகரிகத்தில் மூழ்கியிருக்கும் இன்றைய சமுதாயம் உணர வேண்டியதாகும்.

பெண்களின் கற்பு நெறியைச் சிதைத்தோர்க்கு என்றும் உய்வில்லை என்பதே நாம் குறிப்பிடும் பேருண்மை. ஆயிரம் மறைகள் அறிந்தோனாயினும் வீணைப்புகழ் பெற்ற சிவபக்தன் இராவணன், பிறன்மனை நயந்ததாலே தனக்கும் தன்னரசுக்கும் அழிவைத்தேடினனென்கிறது இராமாயணம்.

அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற முக்காலமும் மாறாத உண்மை இன்றைய அரசியலில் எவ்வாறு செயற்படுகிறதென்பதை வரலாறு காட்டும். அதின் கதாபாத்திரங்களாகிய மக்களும் அரசும் இதனை மறத்தலாகாதென்பதை யாரும் மறுப்பரோ?

உலக அரசியல் — அவதானி

# ஐ நாவில் கைகலப்பு; அதில் என்ன அதிசயம்?

## எண்ணெய் நாடுகள் நிறுவனத்தில்

## (ஒபிஈசி) எண்ணெய் ஜாஸ்தி ஒற்றுமை கம்மி

## எலிசபெத் மாராணியின் சீன விஜயத்தின் நோக்கம் நிறைவேறுமா?

## பிலிப்பைன்ஸில் மார்கோஸ் மறைவிட்டும்

## தீவிர இடதுசாரித் தூவானம் தொடர்கிறது!

### ஐ. நா.

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சித் தலைவர்களை இன்றைய காபுல் ஆட்சியை எதிர்த்துப் போராடும் கெரிலாக்கள் ஐ நா வில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தும் வாய்ப்புக் கிடைத்தபோது, அங்குசென்றவேளை, ஐ நா ஆப்கான் தூதரகப் பிரதிநிதிகளின் தாக்குதலுக்குட்பட்டனர். "உங்களுக்கு இங்கு என்ன வேலை? மாநாடு நடத்த நீங்கள் யார்?" என்ற வெருட்டோடு சிறு அடிபிடியும் நடைபெற்றது

இரு பிரிவினரையும் தடுக்க வந்த பாதுகாப்பு அதிகாரிகளால் அதற்குள் அகப்பட்ட பத்திரிகை நிருபர்களை பாதுகாக்க முடியவில்லை.

"அடியைப்போல அண்ணன் தம்பி உதவான்" என்ற நாடோடி வசனம், வாதத்தில் அதிக நம்பிக்கை அற்ற சண்டைக்காரருக்கு மிகப் பொருத்தமானது. தாம் ஆசிரியர் தம்மைவிட பெரியவர் வேறெவருமில்லையென்ற எண்ணம் ஆப்கானிஸ்தியருக்கும், இந்தியாவில் பஞ்சாபிகளுக்கும் அதிகம் உண்டு.

நாட்டில் நடப்பதைப் பிரதிபலித்ததே ஐ நாக் கைகலப்பு. ஆப்கானிஸ்தானின் புதிய காபுல் ஆட்சி அதனை எதிர்க்கும் கெரில்லாக் கிளர்ச்சிகாரருடன் 1979 டிசம்பர் தொடக்கம் போராடுகின்றது. காபுல்ஆட்சிக்கு ரஷ்ய படைகள் உதவுகின்றன. பெரும்பாலும் காபுல் ஆட்சி வெற்றிபெறுவது நிச்சயமான போதும் நாடு பேரழிவை நோக்கிநிற்கின்றது.

சோவியத் ரஷ்யாவின் தலையீட்டை ஐ நா கண்டித்து, எவ்வித நிபந்தனையுமின்றி, ரஷ்யா தனது படையை முற்றாகத் திருப்பிக் கூப்பிடவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

சோவியத் தலையீட்டை முறியடிக்கவே பாகிஸ்தானுக்கு அமெரிக்காபிரமாண்டமான ஆயுத உதவியை வழங்குகிறது. படிப்படியாகப் படையை வெளியேற்றுவதாகக் கூறும் ரஷ்யா வெற்றி காண முந்தி ஐ நா வின் தீர்மானத்திற்கு கட்டுப்படுவது முயற்கொம்பு.

### ஐ நா தீர்மானங்கள்

ஐ நா வின் செல்வாக்கை நிராகரித்து வருபவர்கள் உலகின் இருபெரும் வல்லரசுகள் அமெரிக்கா நிராகரிக்கவில்லை, அந்த ஆட்சிக்கு எதிராகப் போராடும் கொன்ரு கெரிலாக்களுக்கு உதவுவது சர்வதேச சட்டத்துக்கு மாறானது என்று உலக நீதிமன்றம் தீர்ப்பளித்தது அதனைக் காற்றில் பறக்கவிட்ட அதிபர் றீகனுக்கு, ஐ நா நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றவேண்டுமென்று பெரும்பான்மை வாசகர்களால் இன்னொரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தம்தம் தேசங்களின் ஆயுத பலத்தையும் பாதுகாப்பையும் கருதி, இவ்விரு வல்லரசுகள், நியாயமற்ற போர்களை உருவாக்க உதவினால் சிறிய நாடுகளின்கதிஎன்ன?

மண்டல சார்பற்ற நாடுகளை அலட்சியம்செய்து ஐ நாவைக் குட்டிச் சுவராக்குவது உலக சமாதானத்துக் கேற்பட்டிருக்கும் பெரும் சவால்.

### ஒ பி ஈ சி

பெற்றோல் ஏற்றுமதி செய்யும் நாடுகள் நிறுவனம்- ஒ பி ஈசி [OPEC] என்ற பெருவிலாசம் படைத்திருந்த காலத்தில் அகில உலகமும் அதிர்ச்சி அடைந்தது. இன்று அது படுத்துவிட்டபோதும் எங்கள் நாட்டின் பணவீக்கமோ வாழ்க்கை செலவோ குறைந்தபாடில்லை. இருப்பினும் இந்த நிறுவனத்தின் திமிர் ரொம்ப அடங்கிவிட்டது.

ஒரு பீப்பா எட்டு டொலராக இறங்கியிருந்தது. இந்த அவலத்தை அகற்ற அளவு கடந்த உற்பத்தியைக் குறைக்க நிறுவனம் திட்டமிட்டது. அதன் விளைவு 15 ரூபாயாக விலை உயர்ந்தது கடந்த ஆகஸ்டில் உருவான ஒப்பந்தம் ஈரானுக்குச் சார்பானதென்று செனடி எதிர்த்ததால் கடந்த மாதம் ஜெனிவாவில் நடந்த கூட்டத்தில் செனடி எண்ணெய் அமைச்சர் ஜமானி உற்பத்தியைக் கூட்டும்படி வாதாடினார். நிறுவனத்தில் இல்லாத பிரிட்டன் நோர்வே, மெக்ஸிக்கோ போன்ற நாடுகளை தங்களுடன் ஒத்துழைக்கும்படி வற்புறுத்த விலைதாராளமாகக் குறைக்க வேண்டுமென்றார். சண்டையில் ஈடுபட்டிருக்கும் ஈரானுக்கு இது முடியாத காரியம். எனவே ஈரான் அமைச்சரும் செனடி அமைச்சரும் வாய்ப்போராட ஒ பி ஈ சி யின் எண்ணெய் இனிமேல் உலக ஆதிக்கம் செலுத்துமென்ற அச்சம் நீங்குகிறது.

### சீனாவில் கால்வைத்த முதலாவது பிரிட்டிஷ் மன்னர்

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிஸபெத் இன்று பிரிட்டனின் உலகம் சுற்றும் தூதராகத் திகழ்கின்றார். எனினும் செஞ்சீனாவுக்கு மேற்கொண்ட விஜயம் உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெறும். சீனதேசத்தின் பெருமையை நன்றாக ரசித்திருக்கும் ராணி - எடின்பரோ கோமகனின் அனுபவம் வேறுபட்டது - ஒரு வெறும் சுற்றுலாவில் அங்குபோகவில்லை.

பிரிட்டனின் காலணியாக விருந்துவந்த ஹொங்கொங் 1997ல் சீனாவின் கைக்கு மீண்டும் கிடைக்கிறது. இச்சிறு நாடு உலகின் பொருளாதாரத்தில் ஒரு பெருமிடம் வகிக்கிறது. இன்றுசீனாவின் அந்நியசெலாவணியில் 40சதம் ஹொங்கொங் உழைப்பதனால் அதன் பொருளாதார பலத்தை சீனாநன்கறியும்.

இன்னும் 10 வருடங்களில் தனது சொந்த நாடாகும் ஹொங்கொங், தன்னுடைய அரசியலமைப்புக்கு மாறாகவிருக்க சீனா அனுமதியாது. எனவே இதுகாறும் முதலாளித்துவத்தின் உச்சியில் நின்ற இந்நாட்டு மக்கள் சீன கம்யூனிஸத்தின் அடக்குமுறைக்கு இரையாவோமென்று அஞ்சுகிறார்களாம். அந்த அச்சம் அர்த்தமற்றதென்பதை விளக்க சீனா மகாராணியை வரவழைத்ததும் இந்த அந்நியான்யம் வருங்காலத்தில் விருத்தியடைய வேண்டுமென்பதே பிரிட்டனின் பெருநோக்கம்; அதனை நிறைவேற்றக்கூடிய ராஜதந்திரம் இன்று மகாராணிக்கு இருக்குமளவு வேறெவருக்குமில்லையென்றுகருதப்படுகிறது.

ஏகாதிபத்தியமும் கம்மியூனிஸமும் ஒட்டென்றாலொட்டுமா? என்ற கேள்விக்கு இடமுண்டு. ஆனால் பிரிட்டிஷ் மகாராணி பெரும் உழைப்பாளி என்ற சமாதானம், சீனத்தலைவர்கள் இன்று சொல்வது அவர்களின் அரசியலில் பெரும் மாற்றம் எதனையும் குறிப்பதில்லை. ஆனால் உலகம் போகும்போக்கில் 1997ல் என்ன நடக்கும் என்பதை ஆரறிவார்?

### பிலிப்பைன்ஸ்

உலகில் எங்கெங்கு செல்வர் ஆட்சி மக்களைச் சுரண்டுகிறதோ அங்கெல்லாம் இடதுசாரிக் கொரில்லா யுத்தம் உருவாகிறது. வளர்ச்சியடைந்து காலகதியில் ஆட்சியைக் கைப்பற்றுகிறது.

அந்த நாட்டு மக்களின் தீர்பபு என்னவென்பதை தெரியவிடாது தடுக்கும், முதலாளித்துவ அமெரிக்காவினதும் கம்யூனிஸ்ட் ரஷ்யாவினதும் நியாயமற்ற தலையீட்டை மூன்றாம் உலக நாடுகள் முற்றாக எதிர்க்கின்றன.

இந்தப் பின்னணியில் மக்கள் அமைதிப் புரட்சியால் உருவாக்கிய திருமதி அக்கினோவின் ஆட்சியில் பிலிப்பைன்ஸில் ஜனநாயக அமைப்பில் ஸ்திரம் பெறுவதற்கு 17 வருட கம்மியூனிஸ் கெரில்லாக்கள் ஆயுதப்போராட்டம் பெருஞ் சவாலாகவிருக்கிறது.

வருகிறவருடத்தில் நாட்டுக்கேற்ற அரசியலமைப்பை தக்கமுறையில் மக்கள் அங்கீகாரம் பெற முயலும் திருமதி அக்கினோவிற்கு பாதுகாப்பு அமைச்சரின் எதிர்ப்பு பெரிதல்ல; நாட்டின் ராணுவம் அக்கினோவிற்கு விசுவாசமாகவிருக்கின்றது.

கெரில்லாப்படையினருடன் போராடாது சமாதான முறையில் தீர்வு காண்பதற்கு டிசம்பர் 10 தொடக்கம் 100 நாள் யுத்த நிறுத்தம் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அக்கினோவிடம் மக்கள் கொண்ட நம்பிக்கை சமாதானத்துக்கு வெற்றியளிக்கவல்ல, திடீரென எதிர்ப்புரட்சி ஏற்படுவது அசாத்தியம்.

## இறந்தவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)


சடலங்களில் பலவும் இனம் காணுத நிலையில் புதைக்கப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு புதைக்கப்பட்ட ஒருவர் தமது உறவினர் எனக்கருதி வீட்டுக் கிருத்தியம் நடத்தி துக்கம் கொண்டாடிய ஒருவருக்கு கற்பிட்டியிலுள்ள கடற்படை முகாமிலிருந்து அந்த உறவினர் கடிதம் எழுதியுள்ளார். இதையடுத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதில் மரணமானதாகக் கருதப்பட்ட எட்டுப்பேர் அங்கு உயிருடன் இருப்பது தெரியவந்தது.

பகுதி கிராம சேவை அலுவலரின் உதவியுடன் உறவினர்கள் கற்பிட்டிக்குச்சென்று பார்த்தபோது அங்குள்ள முஸ்லிம் கல்லூரி ஒன்றில் அவர்கள் எட்டுப்பேரும் அகதிகளாக இருபது கண்டு பிடிக்கப்பட்டதாம்.

அந்த எட்டுப்பேரையும் அப்பகுதி உதவி அரச அதிபர் கிராம சேவை அலுவலரிடம் கையளித்தனர்.

இறந்து விட்டதாகக் கருதப்பட்டவர்கள் உயிருடன் சடலமிகள் யாருடையது புன்னகையோடு வீடு சேர்ந்த எனபது இன்னமும் புலனுகனர். ஆனுல் கடலில் ஒதுங்கியவில்லை. (ஈ)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



கட்டையர் பழனி

தோற்றம்: 26-08-1948

மறைவு: 13-11-1985

அன்னரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், மாமா, மாமி மச்சான்மார், மச்சாள்மார், மருமக்கள், உற்ரூர், உறவினர்.

பொற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு கொக்குவில். C 5765

## ஈழ மண்ணில் புகைப்படக் கண்காட்சி

முற்போக்கு கலாமன்றத்தின் ஆதரவில் தமயந்தியின் புகைப்படக் கண்காட்சி

காலம்: 14-11-86 பி ப 3—7 மணி

15-11-86 காலை 10— மாலை 4 மணி வரை

இடம்: கண்டுக்குளி மகளிர் கல்லூரி

பாடசாலை மாணவர் 3 ரூபா ஏனையோர் 5 ரூபா.

கலை மக்களுக்காகவே!

(C 5762)



## அருள் ஒளி மறைந்தது



யாழ்ப்பாணம், வியா உருப்பராய் ஒடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயத்தின் பிரதம சிவாசாரியார் பண்ணிசைச் செல்வர் ச. முத்துக் குமாரசுவாமிக் குருக்கள் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

இவரின் இறுதிச் சடங்குகள் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு உரும்பராயில் நடைபெறும்.

சைவ உலகிற்கு பெருந்தொண்டாற்றிய இவரின் மரணம் உரும்பராய்குதிக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

## கேள்விப் பத்திர முடிவுத் திகதி நீடித்தல்

1-11-86ம் திகதி பிரசுரமான 29-10 86ம் திகதியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் தொடர்பாக

பரந்தனில் அமைக்கப்படவுள்ள சமநல சேவைத் திணைக்கள கட்டட கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் திகதி 19-11-86 காலை 11 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் 18-11-86ம் திகதி காலை 9 மணி வரை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை பளை கமநலச் சேவை நிலையத்திலுள்ள கமநலச்சேவை உதவி ஆணையாளர் கந்தோரில் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கச்சேரி, கிளிநொச்சி, முரசுமோட்டை, பரந்தன். 12-11-86

ஜெகா செந்தில்நாதன், அரசாங்க அதிபரும், மாவட்ட கேள்விச்சபைத் தலைவரும், கிளிநொச்சி மாவட்டம்.

[A-3101]

## மிது வீடியோ மூவிசாரின் நேற்றைய வெளியீடுகள்

1. சத்தியராஜ், சுஜாதா, ஜெயஸ்ரீ நடித்த **விடிஞ்சா கலியாணம்** (பிரமிட் மாஸ்ரர்)
2. சரத்பாபு, சுஜாதா, சந்திரசேகர் மேஜர்சுந்தரராஜன் நடித்த **கண்ணுக்கு மை எழுது** (பிரமிட் மாஸ்ரர்)

**மிது வீடியோ மூவிஸ்**

பிரதான வீதி, சித்தங்கேணி.

[A-3102]

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கனரக மின் தளை யந்திரம் மற சீரமைக்கப்பெற்ற யப்பான் வேதி யந்திரம் விற்பனைக்குண்டு பிள்ளையார். 257, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். [C 5757)

### தவறிவிட்டது

சின்னையா இரத்தினம் உப்புவெளி திருகோணமலை என்பவருடைய அடையாள அட்டை சுன்னுகம் இலங்கை வங்கிக்கருகாமையில் உள்ள ஒழுங்கையில் தவறிவிட்டது இதைக் கண்டவர்கள் சுன்னுகம் கிராம சேவகர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (C 5755)

சுன்னுகத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் உதயகுமார் என்பவருடையஇல 662441732 V. அடையாள அட்டை கொக்குவிலில் இருந்து புங்குடு தீவுக்கு போகும் பாதையில் தவறிவிட்டது. இதைக் கண்டவர்கள் பரிஸ் மாட்ஸ் யாழ்ப்பாணம் கடையில் ஒப்படைக்கவும். (C 5754)

## நியூ விக்ரேஸ் புதிய வீடியோ பட வெளியீடுகள்

(1) கண்ணுக்கு மை எழுது (Pyramid Master)

✶ சரத்பாபு ✶ சுஜாதா

(2) பூ ஒன்று புயலானது (Pyramid Master)

★ சரண்ராஜ் ✶ விஜயசாந்தி

**நியூ விக்ரேஸ்**

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23532

[A 2869]

## யா/ வைத்தீஸ்வர வித்தியாலயம் யாழ்ப்பாணம்

ஆண்டு-7 பிரவேசப் பரீட்சை

19-12-86 வெள்ளிக்கிழமை

கணிதம்: 9-00—11-00; தமிழ்: 11-15—1-15.

இப்பரீட்சையில் மிகக்கூடிய புள்ளிகளைப்பெறும் முதல் ஐந்து மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 29-11-86 சனிக்கிழமை

விண்ணப்பக் கட்டணம்: 5/- ரூபா

விண்ணப்பப் படிவங்களை வித்தியாலய அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

சி. சிவசரவணபவன், அதிபர்.

(A 3097)

## வீடியோ பிரசாத் புதிய வீடியோபட வெளியீடுகள்

1. பானுமதி, சரத்பாபு, சுஜாதா — **கண்ணுக்கு மை எழுது**
2. சத்யராஜ், சுஜாதா — **விடிஞ்சா கல்யாணம்**
3. சிவகுமார், நிபா — **ரோசாப்பூ ரவிக்கைகாரி**
4. JEETHDENDRA, RAJANI — **DUSII DUSHMANI** (HINDHI)

**வீடியோ பிரசாத்**

இல. 424. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[A-31.0]

## வெலிங்டன்

திரையில் 10-30, 2-30, 6-30

சிவகுமார்-ராதிகா கவுண்டமணி கல்லாப்பெட்டி சிங்காரம் நடித்த

**நிலவு சுடுவதில்லை** (கலர்)

## இன்று முதல் லிடோ

10-30, 2-30, 4-30, 6-30

ROMANCING THE STONE (Action and Thrills) [Coluor]

## பிரயாண ஒழுங்கு

# GLORIA TRAVELS

✶ Switzerland

✶ Germany ✶ France

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும் பாஸ்போட், பொண்ட் BOND), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

**GLORIA TRAVELS,**

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

[A-2870]

## பல்கலைக்கழக மாணவன் காணாமல்போயுள்ளமை அதிர்ச்சிக்குரியது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ் பல்கலைக்கழக மாணவன் அ. விஜிதரன் மர்மமான முறையில் காணாமல்போயுள்ள சம்பவம் மிகவும் அதிர்ச்சிக்குரியதும் விசனிக்கத்தக்கதுமாகும் சகல விடுதலை இயக்கங்களும் பொது ஸ்தாபனங்களும் இவ் விவகாரத்தில் தாமதமின்றித் தலையிட்டு காணாமல் போன அம் மாணவனைக் கண்டுபிடித்து பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைக்க முன்வரவேண்டும். இல்லாவிடில் தமிழ்மக்கள் அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவதிலோ அல்லது வெளி உலகில் அதை அம்பலப்படுத்துவதிலோ அர்த்தம் எதுவும் இருக்க முடியாது ''

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் பல்கலைக்கழக மாணவன் காணாமல் போயுள்ளமை பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது வெகுஜன இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு சோ. தேவராஜா வெளியிட்டுள்ள மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு மாணவன் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் தனது பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியிருப்பது தமிழ்மக்களைப் பிளவுபடுத்த முயலும் பேரினவாத ஆட்சியினருக்கு வழங்கப்பட்டிருக்கும் வாய்ப்பாகவே கொள்ளப்படியும் அநீதிக்கு எதிராகவும் நீதிக்காகவும் போராடிவரும் தமிழ்மக்கள் தங்கள் மத்தியில் மனித உரிமைகளைத் தூசாக மதித்து நடத்தப்படும் இது போன்ற சம்பவங்களை அனுமதிக்கக்கூடாது. நீதிக்காகக் கோரிக்கை முன்வைத்துள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு சகல மக்களும் ஆதரவு வழங்கவேண்டும் என எமது மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது. (ஓ)

## ஏ எஸ் பி இடமாற்றம்

கொழும்பு, புதன்

மட்டக்களப்புப் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர்களில் (ஏ. எஸ். பி) ஒருவரான அ தி யே ா ஃபி ள ஸ் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ் ஏழாலை சைவமகாஜன வித்தியாலய சைவ இலக்கிய விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை மேற்படி வித்தியாலய மண்டபத்தில் திரு. வீ த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஒளிவிழா

வவனியா, புதன்

இறப்பைக்குளம் புனித அந்தோனியார் பாலர் பாடசாலையின் ஒளிவிழா நாளை மறுதினம் 15ம் திகதி பாடசாலை வளவில் நடைபெறவுள்ளது.

இறப்பைக்குளம் பங்குத்தந்தை அருட்திரு. ஜேசுராசா தலைமையில் இவ்ஒளிவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இப்பாடசாலை மாணவ, மாணவிகளுடைய கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (சி)

## பேக்கரி உரிமையாளர் சங்கம்

யாழ்ப்பாணம், வியா

வடமாகாண பேக்கரி உரிமையாளர் சங்கம் யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் என்ற புதிய பெயருடன் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புதிய நிர்வாகசபைத் தலைவராக யாழ் பிறிமியர் பேக்கரி உரிமையாளர் சுரேன் கிறிஸ்தோபரும், உப தலைவராக யாழ் மலேயன் பேக்கரி உரிமையாளர் ரி நவரெட்ணமும், காரியதரிசியாக கொழும்புத்துறை மூத்தையா

(7-ம் பக்கம் பார்க்க)

## பொதுக் கூட்டம்

நெல்லியடி, புதன்

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர்சங்க ஏழாவது ஆண்டு நிறைவுதினப் பொதுக்கூட்டம் நாளை மறுநாள் 15ம் திகதி காலை யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

திரு. ஏ. எஸ். அகஸ்ரின் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக யாழ். ஆயர் பேரருட்கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு மைக்கல் சவரிமுத்து அடிகளார், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

''பாரதி பிள்ளைத் தமிழ்'' பாடிப் பாராட்டுப் பெற்ற அரச பொற்கிழிப் புலவர் பண்டிதர் வித்துவான் க. த. ஞானப்பிரகாசம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.


# 87 A/L DAy CLASS

பிரிவு III ஆரம்பமாகி விட்டது

PURE / APPLIED } MATHS—10-.0 To 12-30 Only
ZOOLOGY — 1-30 — 2-30
BOTANY — 2-30—3 30
PHYSICS — 3-30—-430
CHEMISTRY—4-30—5-30

(எமது வழமையான ஆசிரியர் குழுவால் கற்பிக்கப்படுகிறது.

New Master Institute,
B. M. C. LANE, JAFFNA. (A 2868)

# O/L, ENGLISH Paper Class by S. B. IYAR

5-வது பிரிவு ஆரம்பம்
14-11-86
நேரம் மாலை 6 மணி - 7 மணி
12, Wyman Road, Nallur.

C 5730

# பிரயாண ஒழுங்குகள்

குவைத் / சவூதி } சுப்பர் மார்க்கட் ஒயில் கம்பெனி
சிங்கப்பூர் / குவைத் } பணிப் பெண்கள்

அவுஸ்திரேலியா, நோர்வே

ஆகிய நாடுகளுக்கு குறைந்த கட்டணத்துடன் பிரயாண ஒழுங்குகள்.
பாஸ்போட், விசா, பெர்மிட், ரிக்கற் யாவும் துரிதகெதியில் செய்துகொடுக்கப்படும்.

ரஜீவன் ட்ரவல்ஸ்,
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

(A-2862)

# யாழ். வாழ் முஸ்லீம் மக்களுக்கோர் நற்செய்தி !

திரு. நளீம் ஹாஜியாரின் இலங்கையிலே மிகப்பெரிய கோழிப்பண்ணையான Bairaha Farmsஇல், விஞ்ஞான முறைப்படி, மிருக வைத்தியர்களின் ஆலோசனைக்கிணங்க வளர்க்கப்பட்டு, இஸ்லாமிய மதக்கோட்பாடுகளுக்கமைய [HALAL - ஹலால்], சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுவைமிக்க

கோழி இறைச்சி!!
"Bairaha Farm Broilers"
[(B)பைரா (F)பாம் புறொய்லர் கோழி இறைச்சி]
1 Kg - 62/50

குறிப்பு:

★ பொருட்கள் கொழும்பிலிருந்து குளிரூட்டப்பட்டவாகனத்தில் (Freezer Truck) இல் தருவிக்கப்பட்டு, இங்கு குளிரூட்டிய அறையில் (Cold Room) இல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. எம்மிடம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும், பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

✶ மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர் :-

The Medical Hall — மெடிக்கல் ஹோல்

No 224, Hospital Road, Jaffna.
Phone - 22575

இல. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22575

(A 2867)

# பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம்மாதம் 15-ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதி Labourers ஆக செல்ல விரும்புவோர் 14-ம் திகதிக்கு முன்னதாக பாஸ்போட், 6 படங்கள் ஆகியவற்றுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:

N. பாலா,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் வங்களாவடிச் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

★ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் குப்பிளான் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

(A-2845)

# இன்றைய பலன்

மாதம்:— ஐப்பசி
திகதி:— [13-11-86]
கிழமை:— வியாழக்கிழமை
நக்ஷத்திரம்:— உத்தரட்டாதி காலை 7-37 ன்மேல் ரேவதி

மேடம்: பணவிவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும் பொதுப்பணிமூலம் புகழ் கிட்டும். காதலர்வாழ்விலும் மகிழ்ச்சி தென்படும்.

இடபம்: கடன்தொல்லை அதிகரிக்கும் நினைத்த காரியத் தடை; திருடர் பயத்திற்கும் இட முண்டாம்;

மிதுனம்: மாணவர்கள் முன்னேற்றமடைவர். தானிய விருத்தியுமுண்டு. பிரச்னைகள் பல இன்று நல்ல நல்ல முடிவைப்பெறும்;

கடகம்: பந்த பாசம் உங்களைப் பரவசப்படுத்தும். புதிய பாதையில் வழி பிறக்கும். கடமையிலும் கண்ணியம் பிறக்கும்,

சிங்கம்: நண்பர்களே உங்கள் காலை வயரிவிடக்கூடும். வணிகர்கள் வாழ்க்கை சோகம் நிறைந்ததாயிருக்கும். ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும்,

கன்னி: குடும்ப வாழ்வு சிறக்கும்: கொடுக்கல் வாங்கல் பிணக்கும் மறையும்; புதிய வாழ்வும் மலரும்;

துலாம்: குடும்பத்திலும் குறைகேட்க நேரிடும். கடமையில் கருத்து வேற்றுமை உருவாகும். சிறிய விபத்துமேற்பட இடமுண்டு. அவதானம் நன்று.

விருச்சிகம்: தந்தைவழியால் தனதானிய விருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகளை இன்று கையாளுவீர்கள் புண்ணிய யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம்

தனுசு: உழைப்பினால் முன்னேற்றமுண்டு. குடும்பவழியால் மனதுக்கும் நிம்மதி பிறக்கும். குடும்பமும் தழைத்தோங்கும்,

மகரம்: பொன்னான வாழ்வும் கிட்டும் பொன் பொருள் சிறப்புக் கிட்டும். கடமையும் சிறக்கும்.

கும்பம்: முன்னேற்றப் பாதையில் தடங்கல் பல உருவாகும். மனதில் விரக்தி தோன்றும், குடும்பத்திலும் பூசல்கள் தோன்றும்.

மீனம்: அடிசறுக்கும் நிகழ்ச்சியொன்றும்இடம்பெறலாம். சுகாமம் குன்றும் வரவில் மந்தநிலை காணப்படும்,

திருமலை
வே. ரவீந்திரன்

---

யாழ் மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

திருத்துனரும்,
இயக்குனரும்

வயது: 25—45 வரை

கல்வித்தகைமை:

க.பொ.த [சாதாரணம்] பரீட்சையில் சித்தி

அனுபவம்: அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் நிலையமொன்றில் 5 வருடத்திற்குக் குறையாமல் குளிரூட்டல் [Refrigeration]. 3 பேஸ் மின்சாரம் [3 Phase] ஆகிய துறைகளில் உடனடியாகப் பிழைகளைக் கண்டுபிடித்து திருத்தம் செய்யக்கூடிய வல்லமைஇருத்தல்வேண்டும்;

சம்பளத் அளவுத் திட்டம்:
350/- 615/-

15X7—20X8

(எல்லாப்படிகளும் உட்பட ரூபா 1163/-)

விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரித்து பின்வரும் முகவரிக்கு 26-11-1986ம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
யாழ் மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

[A 3090]

---

## புராணபடன பூர்த்தி

யாழ்ப்பாணம், வியா
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன திருவிளையாடற்புராண படன நிறைவுவிழா 17ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறும். தொடர்ந்து கலந்துரையாடலும் விசேடபூசையும் நிகழும்; (ப)

## சமயதீட்சை

யாழ்ப்பாணம், வியா
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆதரவில் நாளை வெள்ளிக்கிழமை விரும்பும் சைவ சமயிகளுக்கு சமய தீட்சை வைக்கப்படும். இச் சபையினது (நீராவியடி) நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கரணவாய் ஸ்ரீமத் கை. திருஞானசம்பந்தக்குருக்கள் தீட்சாகுருவாகவிருந்துதீட்சை வைப்பார். விரும்புபவர்கள் பங்கு பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

★ ★ ★

சுண்டுக்குளி, புதன்
ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினர் நாளை ஐப்பசிக் கடைசி வெள்ளி தினத்தில் காலை ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தில் தீட்சை வழங்கும் வைபவத்தினை நடாத்தவுள்ளனர்

இவ் வைபவத்தில் தீட்சை பெறவிரும்பும் சைவ மக்கள் காலை மேற்படி ஆலயத்திற்கு வருமாறு ஆனைக்கோட்டை இந்து சமயவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ)

## பேக்கரி—

(6ம் பக்கத் தொடர்ச்சி)
பேக்கரி உரிமையாளர் க. குணரெட்ணமும், தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாகசபை உறுப்பினர் தெரிவின்போது பின்வருவோர் தெரிவானார்கள் என். சவரிமுத்து, என். எஸ். என், ரசித் பி, ஜே. அரியநாயகம் எஸ் ராஜரட்ணம், கே அருந்தவநாதன், பி. வின்சென்ட், ஏ தவராஜா, வி, ஸ்ரீகாந்தன். எம். உதயச்சந்திரன், எஸ். நவரட்ணம் (எ)

---

அமரர் ஆ கனகரத்தினம்

# ஏழைப் பிள்ளைகள் உயர் கல்விப் பெற உதவியவர்

கடந்தநூற்றுண்டில் பிறந்த தமிழ் பெருந்தலைவர்களுள் அமரர் ஆறுமுகம் கனகரத்தினமும் ஒருவர் என்பதை நாட்டின் சரித்திரம் தெரிந்தவர்கள் மட்டுமே அறிவர். கலாநிதி ஆனந்தக் குமாரசாமி, சேர் பொன். இராமநாதன் சகோதரர் முதலானோரை உலகம் தெரிந்து கொண்ட அளவு அமரர் கனகரத்தினம் அவர்களைத் தெரிந்துகொள்ளவில்லை. இதற்கான முக்கிய காரணங்கள் முன்குறிப்பிட்டவர்களுக்கிருந்த கொழும்புச் செல்வாக்கு கனகரத்தினமவர்களுக்கு இல்லாதிருந்ததே.

**மு. இராமலிங்கம்**
(அதிபர்,
கனகரத்தினம் ம ம வி)

அமரர் கனகரத்தினம் ஆற்றிய தன்னலமற்ற சேவையின் சின்னமாக விளங்குவது அன்று ஸ்ரான்லி அரசினர்மத்தியகல்லூரி என்றும் இன்று கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்என்றும் அழைக்கப்படும் பாரிய கல்விஸ்தாபனமேதென்னிலங்கையில் அரசாங்கபாடசாலைகள் மிகுதியும் வளர்ச்சியுற்றிருந்த காலத்தில் வடக்கில் சமய சார்பான தனியார் கல்லூரிகளே இருந்தன. ஏழை மக்களின் குழந்தைகள் உயர்கல்வி கற்க வசதியற்ற நிலையில் 1928 இல் அமரர் திரு கனகரத்தினத்தின் அயரா முயற்சியினால் நிறுவப்பட்டதே ஸ்ரான்லிக் கல்லூரி அன்னாரை ஆங்கில தேசாதிபதியிடம் மக்கிருந்த செல்வாக்கினால் டேறபேட் ஸ்ரான்லி என்ற தேசாதிபதியை அழைத்துவந்து பாடசாலையைதிறந்துவைத்ததோடு அதற்கான நன்றிக் கடனாக அவரது நாமத்தையே பாடசாலைக்குச் சூட்டினார். அவரது பரந்த நோக்கிற்கு எடுத்துக்காட்டாக கோண்டாவில் புகையிரத நிலையம், மருத்துவமனை, தபாற்கந்தோர் என்பன விளங்கின; யாழ்ப்பாணம் மன்னார் ஆகிய இரு பகுதிக்கும் ஏககாலத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்ட நிரூபனசபை அங்கத்தவராகத் திகழ்ந்த அமரர் கனகரத்தினம் கல்விச்சபை மலேரியா தடுப்புச் சங்கம், போக்குவரத்துச்சபை போன்ற பல்வேறு சபைகளில் ஏககாலத்தில் பணியாற்றிப் பலரது பாராட்டையும் பெற்றார்.

பல்கலைக் கழகம் உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தை சட்ட நிரூபன சபை உள்ளேயும் வெளியேயும் அனித்தரமாக வலியுறுத்தி வந்த பெரியார் அந்தக் காலத்திலேயே யாழ்ப்பாணத்திற்கு தனியொரு பல்கலைக்கழகம் தேவையென்பதை விளக்கி வந்தார். சுய மொழிக் கல்விக்கும் இலவசக் கல்விக்கும் வித்திட்டவர்களில் அமரர் கனகரத்தினமும் ஒருவரே. 1871இல் பிறந்து 1900இல் சுக்தாரணியாகி உள்ளூராட்சி மன்றத்தில் பல ஆண்டுகள் சேவையாற்றிச் சட்ட நிருபணசபை அங்கத்தவராயிருந்து 1929 இல் இறைவனடியெய்திய பெரியார் தமது வாழ்வில் அரிய பல நற்காரியங்கள் செய்துள்ளார். அவரது அழியாச் சின்னமாக விளங்கும் ஸ்ரான்லிக் கல்லூரி அன்று அன்னாரது நாமத்தைத் தாங்கி நிற்பதோடு அவரது இலட்சியமான கிராமத்தின் ஒவ்வொரு ஏழைக் குழந்தைக்கும் உயர்கல்விகற்க சந்தர்ப்பம் வழங்குதலை. இன்று ஓரளவு பூர்த்தி செய்து வருகிறது. அக் கல்லூரியின் எதிர்கால வளர்ச்சியும் அதன் வெற்றியுமே அமரருக்கு இன்றைய மக்கள் செலுத்தும் நன்றிக் கடனாகும்,

## லயன்ஸ் அன்பளிப்பு

பண்டத்தரிப்பு புதன்
ஜப்பான் நாட்டு லயன்ஸ் கழகங்களினால் அன்பளிப்பு செய்யப்பட்ட உடுதுணிகள் யாழ். மாவட்டத்திலுள்ள லயன் கழகங்களுக்கு ஊடாக யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள வெளி மாவட்டங்களை சேர்ந்த தமிழ் அகதிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது

அவ்வப்பகுதிகளை சேர்ந்த லயன்ஸ் கழகங்கள் மூலம் உதவி அரசாங்க அதிபர்களின் அனுசரணையுடனும், இந்த உடுதுணிகள், சட்டைகள் ஆகியன வழங்கப்பட்டு வருவதாக பிரதி மாவட்ட ஆளுநர் டாக்டர் ரி. டகீ தன் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்; (எ)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 01-01-87ம் திகதி முதல் 31-12-87ம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 27-11-86 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்;

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணையும், கேள்விப்படிவக்கட்டணம் ரூபா. 50/-ம் செலுத்துவதின் பேரில் 26-11-86ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3-00 மணிவரையும் யாழ். மாநகராட்சிமன்ற சிறும்பியடி அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும் கேள்விப்படிவங்களை உள்ளடக்கும் கடிதஉறை அரக்கு முத்திரையிடப்பட்டு. ஆணையாளர், மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம் எனவிலாசமிடப்பட்டு, உறையின் இடதுபக்கமேல் மூலையில் சந்தை/நிலையத்திற்கான பெயர்குறிப்பிடப்படடு யாழ். மாநகராட்சிமன்ற இந்துவிடுதி அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் 27-11-86 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்குப்பிந்தாமல் ஆணையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இக்கேள்விகள் சம்பந்தமான இதரவிபரங்களை மாநகராட்சிமன்ற சிறும்பியடி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்;

சி. வீ கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்;

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 10-11-86

அட்டவணை

| குத்தகை விபரம் | கேள்விப்பிணை | நிர்ணயிக்கப்பட்டஆகக் குறைந்தகேள்வித்தொகை |
|---|---|---|
| 1. செங்குந்தா சந்தை | 2000/- | 190 000/- |
| 2. குருநகர் சந்தை | 2000/- | 190 000/- |
| 3. பெரியகடைமரக்கறிச் சந்தை | 2000/- | 90 00/- |
| 4. நாவாந்துறை சந்தை | 2000/- | 35 000/- |
| 5. பாசையூர் சந்தை | 2000/- | 25 000/- |
| 6. அரியாலை சந்தை | 250/- | 7 0'0/- |
| 7. கொழும்புத்துறை சந்தை | 250/- | 1 000/- |
| 8. நவீனசந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 250/- | 5 000/- |

A 2863

---

உ
சிவமயம்

## விவாக சுபமுஹூர்த்தப் பத்திரிகை

நிகழும் அக்ஷய வருஷம் ஐப்பசி மாதம் 28ந் திகதி (14-11-86) வெள்ளிக்கிழமை காலை 8-30 முதல் 9-30 மணி வரையுள்ள தனுர்லக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| சௌபாக்கியவதி ஸ்ரீ. சரஸ்வதியை | கனிஷ்ட குமாரன் சிரஞ்சீவி இ. ஜெகதீஸ்வர சர்மாவுக்கு (மணி) |

பாணிக்கிரகணம் செய்து கொடுப்பதாய் முன்னை நாதசமேத வடிவாம்பிகையினதும், நல்லைக்கமலாம்பிகையினதும், திருவருள் துணை கொண்டு. நல்லூர் சிவன் சன்னிதான மண்டபத்தில் ஷ முகூர்த்தம் நடைபெறவுள்ளதால். தாங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.
சமாவர்த்தனம் நல்லூர் சிவன்கோவிலில் காலை 4-30 மணி முதல் 5-30 மணிவரை நடைபெறும். வரவேற்பு மணமகளில்லத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| ப்ரம்மஸ்ரீ | திருமதி |
| பொ ஸ்ரீபதி சர்மா | இராமச்சந்திர ஐயர் |
| தம்பதிகள் | கமலாம்பிகா (நீலாம்பா) |
| ஆயுர்வேத வைத்தியர், | ஸ்ரீ கதிரேசன் கோவில், |
| துன்னாலை வடக்கு, | குளியாப்பிட்டி. |
| கரவெட்டி. | A 3095] |

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 13-11-86

## ஈழ மக்கள் மீது

# பாரிய தாக்குதலொன்றை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது

### ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், வியா.

நாளை மறுதினம் பெங்களூரில் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டையடுத்து ஈழமக்கள் மீது விமானத்தாக்குதலுடன் கூடிய பாரியதாக்குதல்ஒன்றை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இத்தாக்குதலின் நோக்கம் ஈழ விடுதலை இயக்கங்களை அரசு முன்வைக்கும் போலித் தீர்வுகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு ஒரு இராணுவ நிர்ப்பந்தத்தை வழங்குவதாகும். தற்போது மேற்கொள்ளப்பட்ட ராணுவத் தாக்குதல்கள் இப் பாரிய தாக்குதலுக்கான முஸ்தீபு நடவடிக்கையே எனக் கருதுகிறோம்.

விமானத் தாக்குதல்களுக்கு உரியவகையில் பதுங்கு குழிகளைத் தயாரிக்குமாறும், இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் நிகழும்போது வேடிக்கை பார்த்தல், கும்பலாக நிற்றல், போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக வாகனங்களை நிறுத்தி வைத்தல் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறும், போராளிகளின் ஆலோசனைப்படி நடந்து கொள்ளுமாறும் ஈழமக்களை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறான தாக்குதல்மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நாம் எமது மக்களின் ஆதரவுடன் இறுதிவரை போராடி இதை முறியடிப்போமெனவும் போலித்தனமான அரைகுறை தீர்வுகளுக்கு என்றும் அடிபணியப் போவதில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறோம். (ஒ)

## இன்றும் நாளையும் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், வியா.

பலாலி ஆசிரியர் கலாசாலை தமிழ் மன்றம் இன்றும் நாளையும் முத்தமிழ் விழாவொன்றை கோப்பாய் ஆசிரியக்கலாசாலையில் நடத்தவுள்ளது

இன்றைய நிகழ்ச்சிகள் மன்றத் தலைவர் திரு சி ஜோ. திலகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இரா.சுந்தரலிங்கம் கலந்து கொள்கிறார்.

இரண்டு நாள் நிகழ்ச்சியிலும் இயல் அரங்கு, இசை அரங்கு, நாடக அரங்கு என்பன இடம்பெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் எழுத்தாளர் க குணராசா, கவமணி க. த. ஞானப்பிரகாசம், பொ. சுந்தரலிங்கம், வீரமணி ஐயர் ஆகியோர் கலந்து கொண்டு செவ்வி வழங்கவுள்ளனர் (ஒ)

## அத்தியாவசிய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

★ சிகரெட் விலை 5 சதத்தால் அதிகரிப்பு.

★ 1 போத்தல் பியர் ரூபா 2-70 ஆலும், ஒரு போத்தல் சாராயத்தின் விலை 6 ரூபாவினாலும் அதிகரிப்பு

★ இறக்குமதி செய்யப்படும் சிகரெட் தீர்வை 1கிலோ 65 ரூபாவால் அதிகரிப்பு

★ பீடி இலையின் இறக்குமதித் தீர்வை 1 கிலோ 10ரூபா அதிகரிப்பு

★ வெளிநாட்டுமதுபானம் ஒரு லீற்றருக்கு ரூ ா 10 அதிகரிப்பு.

★ மொத்த விற்பனை வரி 15 சத வீதத்திலிருந்து 20 சத வீதமாக அதிகரிப்பு இவை பழச்சாறு, ஐஸ்கிறீம், கண்ணாடிவகைகள் ஆகியவற்றுக்கே விதிக்கப்படும்.

★ 27,000 ரூபாவுக்கு மேலாக வருமானம் பெறும் சிக்கன சேமிப்பு சங்கங்களுக்கு 10 சத வீத வரி.

## வடமராட்சியை முற்றுகையிட-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் மீண்டும் தங்களை இலக்கை நோக்கி நகரத் தொடங்கியுள்ளனர். தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் எதிர்தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை பின்வருமாறு கூறுகிறது.

தொடர்ந்தும் இரண்டாவது நாளாக வடமராட்சியிலுள்ள தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை இராணுவ முகாம்களிலுள்ள ராணுவத்தினர் கடற்படையினரின துப, விமானப்படையினரினதும் உதவியுடன் இப்பகுதிகளில் பெரும் இன ஒழிப்பை புரிய தற்சமயம்வரை முயன்று முனைந்துகொண்டிருக்கின்றனர். இன்றும் அதிகாலையில் தொண்டமனாறு முகாமைச் சுற்றி 4 ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டன அதேசமயம்முகாமை விட்டு வெளியேறிய ராணுவத்தினர் முன்னேறி வரும் வேளையில் எமது வீரர்கள் எதிர்கொண்டு பலத்த நேரடி மோதலில் இறங்கினர் இத்தாக்குதலில் ராணுவத்தினர் மேலும் முன்னேறமுடியாத நிலையில் அவ்வவ் இடங்களில் நின்றபடி தாக்குதல்களில் ஈடுபடத் தொடங்கினர்

வல்வை முகாம் ராணுவத்தினரும் தாக்குதல்களைத் தொடர்ந்தவண்ணம் உள்ளனர். முகாமினுள் இருந்தவாறு மோட்டார்த்தாக்குதல்களை மேற்கொண்டவாறு உள்ளனர். இப்பகுதிகளில் ஹெலியின் தாக்குதல் காலை முதல் தொடர்ந்து நடைபெறுகிறது.

தொண்டமனாறு ராணுவ முகாம் ராணுவத்தினர் நேற்று பல 5 அங்குல மோட்டார் செல் தாக்குதலை மேற்கொண்டனர் இதன் மத்தியிலும்நாம் தொடர்ந்தும் எமது இறுதி மூச்சுள்ளவரை போராடி ராணுவத்தினரின இன ஒழிப்பை முறியடிப்போம்.

நேற்று தொண்டமனாறில் இடம்பெற்ற நேரடி மோதலில் எமது தரப்பில் இருவீரர்கள் காயமுற்றனர். அதே சமயம் நேரடி மோதலின் போது எமது வீரர் அப்துல்லா (ராஜநாதன் திருமலை) வீரமரணமடைந்தார். இவருக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நேற்று இடம்பெற்ற தாக்குதல்களால் ராணுவத்தரப்பில் பலர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.' (மா)

## இனப்பிரச்னை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்று ஏற்பட்டுள்ள வன்செயல்களால் பாதுகாப்பு செலவினங்கள் அதிகரித்துள்ளதுடன் பணவீக்கம் ஆறு சத வீதமாகவும் உயர்ந்துள்ளது. உல்லாசப் பிரயாணத்துறை வீழ்ச்சியும் வெளிநாட்டு முதலீடுகளும் குறைந்துள்ளது

இவ்வாறான கஸ்ரங்கள் மத்தியில் பொருளாதார துறையில் இலங்கை முன்னேற்ற மடைந்து வருவது கண்டு உலக நாடுகள் ஆச்சரியமடைந்துள்ளன.

இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் வரை வேலை வாய்ப்பில் எழுந்துள்ள பிரச்னைகள் தீர்க்கப்பட முடியாது நாட்டில் அமைதியும் சமாதானமும் மேலோங்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். (க - லே)

## விஜிதரன்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தும் இப் போராடடத்திற்கு பூரண ஆதரவளிப்பதுடன் பல்வேறு போராட்டங்களை நடத்தப்போவதாக நேற்று நடைபெற்ற கூட்டத்தில் சகல வெகுஜன அமைப்புகளும் முடிவு செய்துள்ளன.

## உமா---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்த திரு உமா மகேஸ்வரன் நேற்றிரவு முதல் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டுள்ளதாக பி. ரி ஐ. செய்தி தெரிவித்துள்ளது.

## போராளிகள் மீதான நடவடிக்கையை அனைத்து தமிழ் மக்களும் ஆட்சேபிக்கவேண்டும்

### — ஈரோஸ்

யாழ்ப்பாணம், வியாழன்

இந்திய அரசின் தெளிவில்லாத காரணமற்ற தமிழ்ப் போராளிகள் கைதுகளையும் தடுப்புக் காவல்களையும் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் ஆட்சேபிக்க வேண்டும் என்று ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) வேண்டுகோள் விடுத்துள்ளது. நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றிலே இவ் வேண்டுகோள் விடுக்கப் பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழகத்தை ஈழப்போராட்டத்தின் பின்புலமாகக் கொண்டு இந்திய மக்களின் ஆதரவோடு நீண்டகாலம் இயங்கிவந்த போராளிகள் இம்மாதம் 8ம் திகதி இந்திய அரசின் மத்திய புலனாய்வுத் துறையினரால்மேற்கொள்ளப் பட்ட கைதிற்கான காரணங்கள் இந்திய அரசினாலோ, தமிழக அரசினாலோ இன்னமும் தெளிவாக முன்வைக்கப் படவில்லை.

முற்பகல் கைதுசெய்யப் பட்ட போராளிகள் அனைவரிடமும் இந்திய மண்ணில் எவரும் வன்முறைகளில் ஈடுபடக்கூடாதென்ற உத்தரவாதம் பெறப்பட்டபின் விடுவிக்கப்பட்டிருந்தனர், ஆனால் இவ் உத்தரவாதம் பெறப் பட்டதன் பின்பும் போராளிகள் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் மீண்டும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இச்செய்கை எம்மை பல வழிகளிலும் சந்தேகம்கொள்ள வைக்கிறது

போராளிகள் கைது இந்திய மண்ணில் நிலவிய வன்முறைகளை நிறுத்தவா? அல்லதுசார்க் மாநாட்டில் கலந்துகொள்ள செல்லும் ஜயவர்த்தனவை திருப்திப்படுத்தவா? அல்லது ஐக்கிய இலங்கைக்குட்பட்ட இடைக்காலத் தீர்வொன்றை பலவந்தமாக போராட்ட அமைப்புகள்மீதுதிணிக்கவா? என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## பிரபா---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை விடுதலை செய்யும் வரையும், கைப்பற்றிய ஆயுதங்களை ஒப்படைக்கும் வரையும் இந்திய மத்திய அரசையும் தமிழக அரசையும் கண்டித்து தமிழீழ பகுதியெங்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்துவோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது:

### ஆசிரியசங்கம்

இந்திய மத்திய அரசின் நடவடிக்கையை கண்டிக்கும் முகமாக தமிழ் மக்களால் இன்று நடத்தப்பட இருக்கும் ஆட்சேப ஊர்வலத்தில் பங்குபற்றி பூரண ஆதரவு நல்குமாறு தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா)

## பருத்தித்துறை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகம், செயலாளர் அலுவலகம், நூலகம், பல வாட்டுகள் வைத்திய நிபுணர்கள் தங்கும் அறை வைத்தியர் விடுதி, குசினி, நீர்க்குழாய்கள் பெரும் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கமும் வைத்தியசாலை சேதப்படுத்தப்பட்டதற்குப் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. இச்சேதங்கள் பற்றி சங்கம் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன, பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி. சுகாதார அமைச்சர் திரு ரஞ்சித் அத்தபத்து ஆகியோருக்கும் அறிவித்துள்ளதுடன் இவ் வைத்தியசாலை இனிமேலும் இவ்வகைத் தாக்குதல்களுக்குள்ளாகாமல் இருக்கக்கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளது. [கி]

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ ச. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் (உரும்பராய்)

10-11-86 அன்று சிவபதமடைந்த உரும்பராய் கற்பக விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ ச. முத்துக் குமாரசுவாமிக் குருக்களின் இறுதிக் கிரியைகள் இன்று [13-11-86] மாலை 3 மணிக்கு உரும்பராயில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

[C 5766] மனைவி, பிள்ளைகள்.

### திருமதி தங்கமுத்து தியாகராசா

காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் தியாகராசாவின் அருமை மனைவியும் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான தியாகராசா தங்கமுத்து காலமானார். இவர் விஜயலட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை, இராமநாதன் கல்லூரி), சரஸ்வதி உப அதிபர் கோண்டாவில் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற முகாமையாளர்,நெற் சந்தைப்படுத்தும் சபை), முருகையா[B C C I வங்கி முகாமையாளர். கொழும்பு] ஆகியோரின் மாமியாரும், வசந்தராசா [நீர்ப்பாசன இலாகா. ஒட்டிசுட்டான்], சிவானி [கனடா], ஜீவகன் [அமெரிக்கா], கணேஷ் [ஹபீப்சூரிச் வங்கி], வாசுகி [கொழும்பு] ஆகியோரின் அன்புப் பேத்தியும், நிலனி [கனடா) வினிதா, வினேசன் ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் மரணச் சடங்கு 13ம் திகதி இன்று வியாழக்கிழமை காலை 11மணி அளவில் கோண்டாவில் மேற்கில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: இ முருகையா. (C5764)

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலேஸ்வரி நடராஜா

உடுவிலைப் பிறப்பிடமாகவும், நுவரெலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி நடராஜா (ஆசிரியர் Good Rest Convent) 10-11-86ல் நுவரெலியாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற ஓவசியர் நடராசாவின் அன்பு மனைவியும், நளினி (கொழும்பு நல்லாயன் கல்லூரி ஆசிரியர்) செந்தில்வேல் ஆகியோரின் அருமைத்தாயாரும், திருமதி இலட்சுமிப்பிள்ளை துரைச்சாமியின் (ஆசிரியர் உடுவில அ. மி. த க. பாடசாலை) அன்புச்சகோதரியும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (13-11-86 உடுவிலில் நடைபெறும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C 5767) தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O, Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126